**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.65/2024 - PW-12**

| | |
|---|---|
| Name | திரு.கேதாரன் |
| Husband/Father Name | கிருபானந்தன் |
| Village /Area | ஆற்காடு |
| Taluk | ஆற்காடு |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.01.2026.

**(எதிரி ஆஜர் ).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2021 அன்று வாலாஜா அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது பிரேத பரிசோதனை செய்ய வேண்டி பானாவரம் காவல் ஆய்வாளரிடமிருந்து குற்ற எண்.207/2021 என்ற வழக்கில் இறந்து போன கபிலேஷ் வயது சுமார் 1 ஆண்டு 9 மாதம், த/பெ.ஆறுமுகம், என்பவரின் பிரேத பரிசோதனையை 12.07.2021 அன்று காலை 10.00 மணிக்கு துவங்கி காலை 11.00 மணியளவில் முடிக்கப்பட்டது. மேற்படி பிரேதத்தை பரிசோதித்ததில் இடது காது மற்றும் மூக்கில் இரத்த கசிவு இருந்தது, இடது கண் புருவத்திற்கு மேல் வெட்டுக்காயம் இருந்தது. தலையின் மண்டை ஓடு எலும்புகள் இடது பக்க மண்டை ஓடுகள் முறிவு ஏற்பட்டிருந்தது. அதை ஒட்டியுள்ள முளைப் பகுதியில் இரத்த கசிவும், இரத்த கட்டியும் இருந்தது. வேறு எந்த காயங்களும் இல்லை. உடல்கூறு பாகங்களை ஆய்வு செய்தவற்காக ஆய்வகத்திற்கு அனுப்பியதில் விஷம் எதுவும் இல்லை என தெரியவந்தது. மேற்கூறிய காரணங்களால் அந்த குழந்தை தலையில் ஏற்பட்ட காயத்தால் இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்து இறந்திருக்ககூடும் என்று தெரியவந்தது. குழந்தை தோராயமாக பிரேத பரிசோதனை செய்தவதற்கு 34 முதல் 36 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கக்கூடும். குழந்தையின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை வழங்கினேன் அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார்

என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறிய காயமானது கடுமையான பொருளின் மீது தவறி விழுந்தால் அவ்வாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. பிரேத பரிசோதனைக்கு முன்பு போலீசார் என்னிடம் இறந்த நபருக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்று என்னிடம் கூறினார்களா என்றால் இல்லை. பிணக்கூறாய்வு சான்றிதழில் இறந்த நபருக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்று நான் கூறுவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னிடம் அறிக்கையை பெற்றுச்சென்றார்கள் மற்றபடி என்னை விசாரிக்கவில்லை.

நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை முழுமையானது இல்லை என்றும் அது ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. குழந்தை தோராயமாக பிரேத பரிசோதனை செய்தவதற்கு 34 முதல் 36 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கக்கூடும் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.19 18:52:43 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.